காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 18 வெள்ளிக்கிழமை 01.05.2020 கதிர் 45



# 674 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே. 01

கோரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 பேர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

2

# மக்கள் மீது பொலிஸார் கொடூரம்!

## வடமராட்சி கிழக்கில் மூன்று பேர் படுகாயமுற்று வைத்தியசாலையில்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 01

வடமராட்சி கிழக்கு குடத்தனை - மாளிகைத்திடல் அம்மன் கோவிலடிப் பகுதியில் வீடொன்றுக்குள் இன்று காலை புகுந்த பொலிஸார் வீட்டிலிருந்தவர் கள் மீதும், அயல் வீட்டவர்கள் மீதும் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் 3 பேர் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2

## ஹெரோயினுடன் இளைஞர்கள் கைது!

கொழும்பு, மே. 01

களுத்துறைப் பகுதியில் ஒரு கிலோகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடவல பகுதியில் இன்று அதிகாலை 3.20 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

2

## கடற்படை சிப்பாயின் தந்தை மீது தாக்குதல்!

கொழும்பு, மே. 01

வாரியப்பொல நெட்டிய பிரதேசத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் தந்தை, அவரது சகோதரர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இருவரும் வாரியப்பொல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்படை முகாமில் கடமையாற்றும் வாரியப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாயின் குழந்தை சுகவீன முற்றிருந்ததால்,

2

## மேலும் மூவர் மீண்டனர்!

கொழும்பு, மே. 01

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் மூவர் குணமடைந்துள்ளனர்.

இதன் காரணமாக நாட்டில் இதுவரை 157 முழுமையாக கொரோனாவிலிருந்து மீண்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரை 666 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செட்டிகுளத்தில் கசிப்புடன் ஒருவர் கைது!



வவுனியா, மே. 01

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இளைஞரொருவரை கசிப்பு உற்பத்திக்கான பொருள்களுடன் கைது செய்துள்ளனர் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

2

## கேப்பாப்புலவு தனிமைப்படுத்தலில் முதியவர்கள் இருவர் திடீரெனச் சாவு!

முல்லைத்தீவு, மே. 01

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபுலவு விமானப்படைத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த முதியவர் ஒருவர் இன்று காலை சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இந்த முதியவர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை வெளியிடப்படாத நிலையில் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

2

## யாழ். பொலிஸார் மீது 9 முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம்,மே.01

யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மார்ச் 20 ஆம் திகதியிலிருந்து இன்று மே முதலாம் திகதி வரை பொலிஸாருக்கு எதிராக 9 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து இன்று மே முதலாம் திகதி வரை 16 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

2

## மஹிந்தவின் கூட்டத்தை புறக்கணிக்கும் ஜே.வி.பி.!

அலரி மாளிகையில் எதிர்வரும் திங்கட்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) புறக்கணிக்க உள்ளது.

இந்தப் புறக்கணிப்பை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்று கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் அல்லது பொதுத்தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் கேட்கப்பட வேண்டும்.

இவை எதுவும் நடக்காமல் ஒரு கூட்டத்துக்கு வந்து கலந்துகொள்வதில் அர்த்தமில்லை. எனவே, தங்களின் அழைப்புக்கிணங்க

2

## மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையில் கைதிகளை தனிமைப்படுத்துவதற்குத் திட்டம்!

மட்டக்களப்பு, மே 01

மட்டக்களப்பு மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையைத் தற்காலிகமாக தம்மிடம் ஒப்படைக்கும்படி, சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது சிறைச்சாலை கள் திணைக்களம்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜெயசிறி தென்னக்கோன், சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ரானி ஜெயவர்தனவுக்கு அனுப்பிய கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் உள்ள காலப் பகுதியில் புதிய கைதிகளை உடனடியாகச் சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்வது, சிறைக்குள் கொரோனா பரவலடையச் செய்யும் அபாயத்தை ஏற்படுத்தும் என்பதால், தற்காலிக தங்குமிடமொன்றை சிறைத்துறை எதிர்பார்க்கிறது.

இதன்படி, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்படும் புதிய கைதிகள் மாந்தீவு வைத்தியசாலை வளாகத்தில் 14 நாள்கள் தங்க வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கைதிகளை தங்க வைக்க பூசா, நீர்கொழும்பு, போகம்பரை உள்ளிட்ட சிறைச்சாலைகளிலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் பட்சத்தில் மாந்தீவிலும் கைதிகளைத் தடுத்து வைக்க சிறைத்துறை ஆலோசிக்கிறது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# பத்தேகமவில் சுகாதாரப் பரிசோதகரை அச்சுறுத்தியவர் பொலிஸாரால் கைது


பத்தேகம பொது சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை, பத்தேகம பொலிஸார், நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

பட்டபொல கஹடட்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபர் ஒருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரின் தந்தை, பழுதடைந்த மீன்களை விற்பனைச் செய்து வந்த நிலையில், அந்த மீன் விற்பனை நிலையத்தில் திடீர் சோதனைகளை மேற்கொண்ட பொது சுகாதார பரிசோதகர்கள், மீன் விற்பனை நிலையத்திலிருந்த சுமார் 17 கிலோகிராம் மீன்களை அழித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த நபரின் மகன், பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயத்துக்குச் சென்று முறையற்ற விதத்தில் நடந்துகொண்டுள்ளமையுடன், பொது சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, பொலிஸார் அந்த நபரைக் கைதுசெய்துள்ளனர்.



## நேற்று மட்டும் 1400 பேருக்கு சோதனைகள்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படை உறுப்பினர்கள் தொடர்ந்து இனங்காணப்பட்டபோதும், அதில் வீழ்ச்சி நிலையை காணக்கூடியதாக உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நேற்று இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 09 பேர் கடற்படையினர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று மாத்திரம் சுமார் 1400 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெசாக் பண்டிகைக்கான வழிகாட்டல்கள் வெளியீடு

வெசாக் பண்டிகையின் போது பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார். கோவிட் - 19 இலிருந்து அனைவரையும் பாதுகாக்க இந்த வழிகாட்டுதல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதன்படி விகாரைகளுக்குச் சென்று வழிபடும்போது தனிமனித இடைவெளிகளை கடைப்பிடிப்பது கடினம் என்பதால் இயன்றளவு வீடுகளிலேயே வழிபாட்டு நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வெசாக் உற்சவம் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளும் பொருத்தமான சுகாதார பரிந்துரைக்கு ஏற்ப பின்பற்றபட வேண்டும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் வெசாக் பண்டிகையின் போது தயாரிக்கப்படும் வெசாக் கூடுகள், தோரணங்கள் மற்றும் அலங்காரங்களை வீட்டுக்கு மட்டுமே மட்டுப்படுத்துமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மன்னார் பெரியமடு பகுதியில் இடியுடன் கூடிய கடும் மழை

### 4 வீடுகள் சேதம்;17குடும்பங்கள் பாதிப்பு

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய மடு கிராமத்தில் நேற்று (30) மாலை இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கடும் மழையினால் 4 வீடுகள் சேதமடைந்துள்ளமையோடு, தோட்டச் செய்கையும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று மாலை 6.30 மணியளவில் பெரிய மடு கிராமத்தில் இடி, மின்னல் தாக்கத்துடன் கூடிய மழையினால் வீடு ஒன்று பகுதி அளவில் சேதமடைந்துள்ளதோடு, அக்கிராமத்தில் ஏற்பட்ட மினி சூறாவளி தாக்கத்தினால் மூன்று வீடுகள் பாரிய அளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் இந்தக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பப்பாசி செய்கை முழுமையாக பாதிப்படைந்துள்ளதோடு, பலாமரம், வாழைமரம் போன்றன சேதமடைந்துள்ளன.

இதனால் சுமார் 17 குடும்பங்கள் வரை பாதிப்படைந்துள்ளன.

இந்தப் பகுதிக்கு இன்று சென்ற அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெசாக் வாரம் அறிவிப்பு

தேசிய வெசாக் வாரம், மே மாதம் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை, புத்தசாசன அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பொலிஸார் மீது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் 9 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிரானவை. கோப்பாய், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை மற்றும் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு எதிராகவே முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்தோடு இராணுவத்துக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை ஆனையிறவு இராணுவச் சோதனைச் சாவடி படையினர் தொடர்பாகவும் மற்றையது பூநகரிப் பகுதியில் மீன் பிடிக்க சென்றவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியமை தொடர்பாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஏனைய முறைப்பாடுகள் சமுர்த்தி நிவாரணம் வழங்கல் தொடர்பில் அதிகாரிகளுக்கு எதிராகப் பொதுமக்களால் பதியப்பட்டிருக்கின்றன.

பொலிஸாருக்கு எதிராகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அந்தந்த பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளன - என்று குறிப்பிட்டார்.

## செட்டிகுளத்தில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை செட்டிகுளம், பெரியகுளம் 10 ஆம் கட்டைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் சிலர் ஈடுபடுகின்றனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரதீப்குமார் தலைமையிலான பொலிஸ் குழு சோதனையில் ஈடுபட்ட போதே இந்தப் பொருள்களைக் கைப்பற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 54ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் 3 போத்தல் கசிப்பு மற்றும் பரல்களுடன் வீரபுரத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனைக் கைது செய்துள்ளனர் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடற்படை சிப்பாயின் ......

அதற்குத் தேவையான மருந்தைக் கொள்வனவுச் செய்வதற்காக இந்த இருவரும் மருந்தகம் ஒன்றுக்குச் சென்ற போதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்விருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எனச் சந்தேகித்து, சிலர் தாக்குதலை மேற்கொண்டனர் எனப் பாதிக்கப்பட்ட இருவரும் தெரிவித்தனர்.

கடற்படைச் சிப்பாய் அவரது வீட்டுக்கு இதுவரை வரவில்லை என்றும் அத்துடன், அவர் கொரோனா தொற்றாளராக அடையாளங் காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்களைக் கைது செய்யப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள்.

## ஹெரோயினுடன் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது சந்தேகத்துக்கிடமான கார் ஒன்றை அவதானித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனைச் சோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து 700 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதை அடுத்து காரில் பயணித்த இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து மடவல பகுதியில் சந்தேகநபர்கள் வாடகைக்குத் தங்கிவந்த வீட்டிலிருந்த 300 கிராம் ஹெரொயினும், 9 மில்லி மீற்றர் ரக உள்நாட்டு ரிவோல்வர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை, பண்டாரகம மற்றும் மொரட்டுவ ஆகிய பகுதியைச் சேர்ந்த 21,27,29 ஆகிய வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## கேப்பாப்புலவு தனிமைப்படுத்தலில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் இன்று மாலை மீண்டும் ஒரு வயோதிபர் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்கிறார் என முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இன்று மட்டும் இரண்டு முதியவர்கள் உயிரிழந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டமை மக்கள் மத்தியில் அச்ச சூழலை உருவாக்கி உள்ளது.

## 674 பேருக்கு.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 674ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

157 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

510 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மஹிந்தவின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலரி மாளிகையில் நடைபெற வுள்ள கூட்டத்தில் எமது கட்சி சமுகமளிக் காது - என்று அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

## மக்கள் மீது பொலிஸார் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று நுழைந்த பொலிஸார் அவர்களைக் கள்ள மண் ஏற்றினார் என்றும், இதனால் ஹன்ரர் வாகனத்தை எடுத்துச் செல்லப்போகிறார்கள் என்றும் கூறியிருக்கின்றனர்.

இதனையடுத்து தாம் மணல் ஏற்றவில்லை எனவும், வேண்டுமெனில் வாகனத்தின் இயந்திரத்தில் சூடு இருக்கிறதா? எனப் பார்க்குமாறும் வீட்டிலிருந்த இளைஞர்கள் கூறினார்.

ஆயினும் விடாப்பிடியாக நின்ற பொலிஸார் வாகனங்களைத் தாம் எடுத்து செல்லப் போவதாகின்றனர் எனக் கூறினராம். இதனையடுத்து பொலிஸாரின் அத்துமீறலை அவர்கள் வீடியோ எடுத்துள்ளனர். இதனையடுத்து வீடியோ எடுத்த தொலைபேசியை பறித்த பொலிஸார் கஞ்சா வைத்துள்ளீர்கள் என வழக்குப் போடுவோம் என அச்சுறுத் தியமையுடன், அந்த வீடியோ வெளியே போகக்கூடாது எனவும் மிரட்டினர்.

இதனையடுத்து இன்று காலை அதே வீட்டுக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைவர் மீதும் மிருகத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர். பெண் ஒருவரை காலால் மிதித்து அவர் மயங்கி விழும் வரை அடித்துள்ளனர். இந்நிலையில் 3 பேர் காயமடைந்து மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் காயமடைந்துள்ள போதும் அவர்கள் அச்சத்தினால் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றைக் கூட்டினால் கொரோனா வைரஸ் பரவுமா?

தாங்கள் அதிகாரத்தில் தொடர வேண்டும் என்பதற்காக எதுவும் கூறலாம், எப்படியும் கூறலாம் என்ற சிந்தையில் இருக்கின்றார்கள் போலும் ஆட்சியாளர்கள் மற்றும் அவர்தம் தரப்பை சேர்ந்த அரசியல்வாதிகள்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களான பின்னரும் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கு வாய்ப்பில்லை என்பது தெளிவாகிவிட்டதால், நாடாளுமன்றக் கலைப்பை வாபஸ் பெற்று, பழைய நாடாளுமன்றத்தை மீளவும் கூட்டி, நாடாளுமன்ற ஜனநாயகம் செத்து விடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும்படியான அழைப்பு தென்னிலங்கையில் வலுத்து வருகின்றது.

அந்தக் கோரிக்கையின் பின்னால் இருக்கக் கூடிய நியாயப்பாடுகளை உணர்ந்துள்ள அரசுத் தலைமை, அதன் காரணமாக அந்தக் கோரிக்கையை வலுக்க விடாமல் அடக்கி வைப்பதில் குறியாய் இருக்கின்றது.

அதற்காக அக் கோரிக்கை தொடர்பில் பல்வேறு புதிய புதிய சாக்குப் போக்குகளை அது கூறி வருகின்றது.

அந்த வகையில் ஒன்றுதான் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்த்தன நேற்று கொழும்பில் செய்தியாளர்களைக் கூட்டி வைத்து விடுத்த அறிவிப்பாகும்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறுகின்றமையை மாதிரி நாடாளுமன்றத்தை மீளக் கூட்டினால் அதன் உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து - அபாயம் - ஏற்படும் என அவர் எச்சரிக்கைக் காரணம் முன்வைத்திருக்கின்றார்.

'ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம்!' - என்ற கதை மாதிரி இருக்கின்றது, நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு எதிராக அவர் கூறும் நொண்டிச் சாக்கு அல்லது அபத்த விளக்கம்.

நாடாளுமன்றம் பரந்த விஸ்தாரமான கட்டடம். நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் சபை கூட மிக விசாலமானது; பரந்தது.

வரும் திங்கட்கிழமை - இன்னும் மூன்று நாள்களில் - கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாக இருந்தவர்களை - அதாவது முன்னாள் எம்.பிக்களை - கொழும்பில் தமது அலரிமாளிகை இல்லத்துடன் கூடிய மண்டபத்தில் ஒரு கூட்டத்துக்கு அழைத்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அன்றைய தினம் மாலை வரை நடைபெறவுள்ள அந்த 'மாதிரி நாடாளுமன்றக் கூட்டம்' நடைபெறும் கட்டடத்துடன் ஒப்பிடும்போது நாடாளுமன்றக் கட்டடமும், சபையும் மிக விசாலமானவை, காற்றோட்டமானவை, சுகாதாரம் மிகுந்தவை.

அலரிமாளிகை மண்டபத்தில் இப்படித் தொடர் கூட்டங்களைப் பிரதமர் மஹிந்த கூட்ட முடியுமானால் -

கடந்த வாரம் பௌத்த மதத் தலைவர்கள் பல டசின் பேரைத் தமது ஜனாதிபதி செயலக மண்டபத்தில் கூட்டி வைத்து ஜனாதபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்தாலோசனை நடத்தியமை போல கூட்டங்கள், சந்திப்புகளை நடத்த முடியுமானால் - நாடாளுமன்றம் திரும்பவும் கூடுவதில் பெரும் - மருத்துவ - சுகாதாரச் சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறப்படுவது அர்த்தமேயற்றது.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது என்று தீர்மானித்தால் அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறுகின்ற யோசனைப் பிரகாரம், ஒரு சில கட்சித் தலைவர்களை சபைக்கு அழைப்பதோடு எஞ்சி இருக்கும் உறுப்பினர்களை காணொலி இணைப்பின் மூலம் சபை நிகழ்ச்சிகளில் பங்குபெறச் செய்யலாம்.

ஏற்கனவே ஒரு மாதத்துக்கு முன்னர் - இந்த கொரோனா அச்சுறுத்தல் வந்த கையோடு - இதே வழியில் தனது நாடாளுமன்றத்தின் முக்கிய கூட்டத்தை நடத்திக் காட்டியிருக்கின்றது மலைதீவு.

அந்த உதாரணத்தையும் கூட கூட்டமைப்பின் பேச்சாளர் அரசுத் தலைமைக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே 'மனமுண்டால் இடமுண்டு'. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எப்படியும் மீளக் கூட்ட வேண்டும் என்பதில் விடப்பிடியாக எதிர்க்கட்சிகள் இருக்குமானால் - அத்தீர்மானத்துக்கு ஆளும் கட்சி சாதகமான நிலைப்பாடு ஒன்றை எடுக்குமானால் - கொரோனாத் தொற்று ஏற்படாத வகையில் அந்தக் கூட்டத்தை கூட்டுவது ஒன்றும் அப்படிப் பாரிய சவாலான காரியமே அல்ல.

# சுகாதாரம் பேணும் பணியில் சிவன் அறக்கட்டளை அமைப்பு








கொரோனா குறித்தான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் நோக்கில் 10 ஆயிரதம் துண்டுப்பிரசுரங்களை சிவன் அறக்கட்டளை அமைப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் கே.குமாரவேலிடம் கையளித்துள்ளது.

இந்நிலையில் வைத்திய சாலை ஊழியர்களுக்குத் தேவையான கண்ணாடியிலான முகக் கவசத்தை வழுங்கத் தயாராக இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்படி விடயம் தொர்டபில் அந்த அமைப்பின் ஸ்தாபகர் கணேஷ் வேலாயுதம் நேற்று வியாழக்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

எமது அமைப்பு மக்கள் நலன் சார்ந்து செயற்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் பல்வேறுபட்ட மக்கள் நலன் பணிகளை முன்னெடுத்திருந்தோம். தற்போது கொரோ னாவின் தாக்கம் நாட்டில் அதிகரித்து செல்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கொரோனா தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தேவையான ஒன்றாகும். இதன் பிரகாரம் சமூக இடைவெளி குறித்த மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் 10 ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கே.குமாரவேலிடம் புதன்கிழமை கையளித்தோம்.

இந்தத் துண்டுப்பிரசுரத்தில் எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்பதற்கு சமூக இடைவெளி முக்கியமானது என்பதைப் படம்பிடித்து காட்டியுள்ளோம். அத்துடன் எப்போதும் ஒவ்வொருவருக்கும் இடையில் 3 அடி இடைவெளியை பேண வேண்டும் என் பது குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப்பிரசுரங்களை கையளித்த போது வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் ஒட்டுவதற்கு மேலும் 5 ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் தருமாறு எம்மிடம் சுகாதார துறையினரால் கோரிக்கை விடுகப்பட்டது.

இதனை நாம் தருவதாக யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளரிடம் தெரிவித்தோம். இதற்கமைய மேலும் 5 ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விரைவில் வழங்க உள்ளோம்.

வைத்தியசாலை ஊழியர்களின் நலனைப் பேணும் வகையில் அவர்களுக்குத் தேவையான கண்ணாடியில் அமைந்த முகமூடிக் கவசங்களைப் பெற்றுத்தரத் தயாராக உள்ளோம் என வடமாகாண சுகாதார பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளோம்.

முதல் முதலில் ஊடரங்கு சட்டம் தளர்த்தப்பட்ட போது மக்கள் சமூக இடைவெளியைப் பேணாதிருந்தமையையிட்டு நாம் கவலை அடைந்தோம். இதன் பிரகாரமே மேற்படி துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு வழங்க முன்வந்தோம்.

மேலும் எம்மால் நெல்லியடி சந்தைப் பகுதியில் மக்கள் கைகளைக் கழுவி சுகாதரத்தை பேணும் வகையில் கால் அழுத்தத்தினால் செயறபடுத்தப்படும் குழாய் நீர் செயற்றிட்டத்தை அமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்தோம்.

கொரோனாவில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மக்களின் பங்களிப்பு முக்கியமானது. சமூக இடைவெளியை பேணுவது மாத்திரமல்லாது முக கவசங்களை அணிவது உள்ளிட்ட சுகாதாரத்தைப் பேணும் செயற்பாட்டை மக்கள் பெறுப்புடன் செய்ய வேண்டும். - என்று அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

# ஒலுவில் தனிமைப்படுத்தல் முகாமில் நால்வருக்குக் கொரோனா தொற்று

அம்பாறை, மே. 01

அம்பாறை, ஒலுவில் தனிமைப்படுத்தல் முகாமில் மேலும் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இந்நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நால்வரும் சிகிச்சைககாக காத்தான்குடி வைத்தியசாலைக்கு நேற்று வியாழக்கிழமை இரவு அனுப்பிவைக்கப்பட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

கடற்படையினரால் பராமரிக்கப்படும் மேற்படி முகாமில் வத்தளை, ஜா - எல, சுதுவெல பகுதியைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பலருக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நால்வருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து, அந்த நால்வரும் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சொந்தமான அம்பியூலன்ஸ் வண்டியூடாக உடனடியாக காத்தான்குடி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

# அரசியல் கட்சிகளின் செயலாளர்களை சந்திக்கின்றது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, மே. 01


நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை காலை 11.15 மணிக்குத் தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒரு அரசியல் கட்சியிலிருந்து ஒரு பிரதிநிதியை மாத்திரம் கலந்துகொள்ளச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகளிடம் கோரியுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# தமிழகத்தில் கொரோனாப் பாதிப்பு புதிய உச்சத்தைத் தொடுகின்றது

## நேற்று மட்டும் 161 பேருக்குத் தொற்று உறுதி

சென்னை,மே01

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு புதிய உச்சத்தை தொட்டு இருக்கிறது. நேற்று ஒரே நாளில் 161 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பதால், ஊரடங்கு கட்டுப்பாடுகள் ஒரே நேரத்தில் தளர்த்தப்பட வாய்ப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு பல்வேறு கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், தமிழகத்தில் கொரோனா நோய்க்கிருமி பரவுவதை தடுத்து நிறுத்த முடியவில்லை.

நோய்த்தொற்று பரவுவது நாளுக்கு நாள் அதி கரித்து வருகிறது. கடந்த சில நாள்களாக பச்சிளம் குழந்தைகளும், சிறுவர்களும் இந்த நோய் தொற் றுக்கு அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கர்ப்பிணிகளும், முதியவர்களும் தொடர்ந்து பாதிப்புக்கு ஆளாகின்றனர். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தொற்றால் தமிழகத்தில் சமூக பரவல் தொடங்கிவிட் டதோ என்ற அச்சம் ஏற்பட்டு உள்ளது.

நேற்றுத் தொற்று ஏற்பட்டவர்களில் 2 மாத பெண் குழந்தை உள்பட 138 பேர் சென்னையைச் சேர்ந் தவர்கள். அவர்கள் கொரோனா வைரஸால் பாதி க்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்து சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 97 ஆண்கள், 64 பெண்கள் என 161 பேர் கொரோனா நோய் தொற் றால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் மாஎஇலத் தில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,323 ஆக உயர்ந்து இருக்கிறது.

# இந்தியாவில் உயிரிழப்பு 1,147 ஆக இன்று உயர்வு

புதுடெல்லி,மே01

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நாட்டில் கொரோனா பாதிப்புக்கு பலி எண்ணிக்கை 1,074 ஆக நேற்று உயர்வடைந்து இருந்தது. 8,325 பேர் குணமடைந்தும், 23,651 பேர் தொடர் சிகிச்சையிலும் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை 33 ஆயிரத்து 50 ஆக உயர்வடைந்தது.

இந்த நிலையில், மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டில் கொரோனா பாதிப்புக்கு பலி எண்ணிக்கை 1,147 ஆக உயர்வடைந்து உள்ளது. 8,889 பேர் குணமடைந்தும், 25,007 பேர் தொடர் சிகிச்சையிலும் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை 33 ஆயிரத்து 50ல் இருந்து 35 ஆயிரத்து 43 ஆக உயர்வடைந்து உள்ளது.

# பலியானோர் எண்ணிக்கை மராட்டியத்தில் 459 ஆனது

உலக நாடுகளில் பெரும் அச்சுறுத்தலாக உள்ள கொரோனா வைரஸ் இந்தியாவில் தீவிர பாதிப்பு ஏற்படுத்தி வருகிறது. நாட்டில் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளது. இதனால், கொரோனா பரவல் அதிகளவில் குறைக்கப்பட்டு உள்ளது என நிபுணர்கள் கூறுகின்றனர். எனினும், பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

நாட்டில் அதிக அளவாக மராட்டியத்தில் 10,498 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது. பலி எண்ணிக்கை 400ல் இருந்து 432 ஆக நேற்று உயர்ந்து இருந்தது. இந்நிலையில் ஒரே நாளில் 27 பேர் பலியானமையால் பலி எண்ணிக்கை 432ல் இருந்து 459 ஆக இன்று உயர்ந்து உள்ளது. 1,773 பேர் குணம டைந்து வீடு திரும்பி உள்ளனர்.

கோவாவில் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட 7 பேரும் சிகிச்சை முடிந்து சென்றுள்ளனர். இதனால் கொரோனா வில் இருந்து முழு அளவில் விடுபட்ட நிலையை கோவா அடைந்துள்ளது. இதனை தொடர்ந்து மணிப்பூர், திரிபுரா மற்றும் அருணாசல பிரதேசம் ஆகியவையும் கொரோனா பாதிப்பில் இருந்து முழுவதும் விடுபட்டு உள்ளன.

# கொரோனா வைரஸ் வௌவாலால் பரவாதாம்!

## இந்திய ஆய்வில் கண்டுபிடிப்பு

மதுரை,மே.01

வௌவால்களிடம் ஆய்வு மேற்கொண்டபோது கொரோனா வைரஸ் வௌவால் மூலம் பரவுகிறது என்பதற்கான விஞ்ஞான பூர்வமான ஆதாரங் கள் கண்டறியப்படவில்லை என்று மதுரை பல் கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கூறினார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் உயிரியல் அறிவியல் துறை செயல்பட்டு வரு கிறது. இந்த துறை வௌவால் பற்றிய ஆராய்ச்சி யில் ஈடுபட்டு வருகிறது. இதில் 35 மாணவர்கள் வௌவாலின் குண நலன்கள் தொடர்பான டாக்டர் பட்ட (பி.எச்.டி) ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

ஆய்வு தொடர்பாக பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும், தேசிய விஞ்ஞான கழகத்தின் கவுரவ விஞ்ஞானியுமான மாரிமுத்து கூறியவை வருமாறு –

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் வௌவால் மூலம் பரவுகிறது என்று தக வல்கள் வெளியாகி உள்ளன. இவை வௌவால் களின் பாதுகாப்பை கேள்விக் குறியாக்கி உள்ளன. கொரோனா குறித்து வௌவால்களிடம் ஆய்வு மேற்கொண்டபோது கொரோனா வைரஸ் வௌவால் மூலம் பரவுகிறது என்பதற்கான விஞ் ஞான பூர்வமான ஆதாரங்கள் இதுவரை கண்ட றியப்படவில்லை.

அல்பா வைரஸ், பிளா வைரஸ், வெஸ்க்யூ வைரஸ், ஆர்.பி. வைரஸ் போன்றவை வௌவா லிடம் கண்றியப்பட்டுள்ளன. இதன்மூலம் கொரோனா தொற்று பரவாது. அதற்கான உயிரி யல் ஆதாரங்கள் இல்லை. எனவே தற்போதைய சூழ்நிலையில் வௌவால்களை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

# அமைச்சர்களுடன் மோடி ஆலோசனை



புதுடில்லி,மே.01

இந்தியாவில் பிரகடனப்படுத்தப்பட்டு நடை முறைப்படுத்தப்படும் ஊரடங்கு நாளை மறுதினத் துடன் முடிவடைய உள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட மூத்த அமைச்சர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா, வர்த்தகத்துறை மற்றும் ரயில்வேத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், விமான போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப்சிங் புரி மற்றும் அமைச்சரவை செயலாளர் ராஜீவ் கவுபா ஆகியோர் கலந்து கொண் டனர்.

கொரோனா வைரஸ் காரணமாக அமல்படுத்தப் பட்ட ஊரடங்கு மே 3 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. இதற்கு அடுத்து ஊரடங்கு நீட்டிக்கப்படுமா அல்லது தளர்வுகள் இருக்குமா என்ற எதிர்பார்ப்பு மக்களிடத்தில் எழுந்துள்ளது. இதனிடையே, சிவப்பு வலயப் பிரதேசங்கள் தவிர்த்து மற்ற இடங்களில் தளர்வுகள் இருக்கும் எனவும், இது குறித்து அறி விப்பு விரைவில் வெளியாகும் எனவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் வெளிமாநில தொழிலாளர்களை சொந்த ஊர்களுக்கு செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# 636 கி.மீ. தொலைவில் தெளிவாக தெரியும் இமயமலை!

சஹரான்பூர்,மே01

ஊரடங்கால் காற்று மாசுபாடு குறைந்து, உத்தர பிரதேசத்தின் சஹரான்பூரில் தெளிவாக தெரிந்த இமயம லையை மக்கள் படம் பிடித்து வருகின்றனர்.

இந்தியா முழுவதும் கொரோனா பரவலைக் கட்டுப் படுத்த ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. முதலில் கடந்த மார்ச் 24 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு ஏப்ரல் 14 ஆம் திகதி வரை தொடர்ந்து 21 நாள்களுக்கு நடைமுறையில் இருந்தது. பின்னர் வைரஸ் பாதிப்பு தீவிரமடைந்த நிலையில், ஊரடங்கு நாளை மறுதினம் வரை நீட்டிக்கப்பட்டது.

ஊரடங்கால் பல்வேறு தொழிற்சாலைகள் இயங்க வில்லை. அவற்றின் கழிவுகள் வெளியேற்ற அளவும் குறைந்தது. இதனால் நீர் நிலைகள் தூய்மையடைந்தன. கங்கை நீர் தெளிவானது. இதேபோன்று வாகன போக்குவரத்தும் பெருமளவில் குறைந்தன. காற்றில் கலந்த நச்சு வாயுக்களின் அளவும் குறைந்தது.

இமாசல பிரதேச எல்லை அருகே அமைந்துள்ள பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தர் நகரில் இருந்து சுமார் மலைத்தொடர் இருக்கிறது. காற்று மாசு குறைவால், பனியால் சூழப் பட்ட இந்த மலைத்தொடரின் ரம்மியமான காட்சி ஜலந்தர் பகுதி யில் கடந்த சில நாள்களுக்கு முன் தெரிந்தது. சுமார் 25 ஆண் டுகளுக்கு பின்பு இந்த பனிமலை தெரிந்துள்ளது.

இதனை ஜலந்தர்வாசிகள், தங்கள் வீடுகளில் இருந்து இந்த மலைத்தொடரின் பின்னணியில் 'செல்பி' எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவிட்டனர்.

தொடர்ந்து காற்று மாசுபாடு அளவான காற்று தர குறியீடு 50க்கும் குறைவாக சென்ற நிலை யில், உத்தர பிரதேசத்தின் சஹரான்பூரில் இருந்து 636 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பனியடர்ந்த இமயமலை கடந்த 30 வருடங்களுக்கு பின்னர்



இதனை அரசு ஊழியர் மற்றும் புகைப்பட கலைஞ ரான துஷ்யந்த் குமார் என்பவர் தனது வீட்டின் முகப்பு பகுதியில் இருந்தபடி தன்னுடைய கமராவில் படம் பிடித் துள்ளார். இதை இமயமலையின் உட்புறம் அமைந்த

# கனடா இராணுவ ஹெலி கிரீஸ் கடலில் வீழ்ந்தது ஒருவரின் சடலம் மீட்பு: 5 பேரைக் காணவில்லை!

டோரென்டோ,மே 01

கிரீஸ் நாட்டு கடலில் கனடா இராணுவ ஹெலிக் கொப்டர் விழுந்து நொறுங்கியதில் ஒருவர் பலியானார். 5 பேர் மாயமாகி உள்ளனர்.

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் கிரீஸ் நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள அயோனியன் தீவில் நேட்டோ படைகள் முகாமிட்டு உள்ளன.

இதையொட்டி நேட்டோ உறுப்பு நாடான கனடா தனது விமானம் தாங்கி போர்க்கப்பல் மற்றும் இராணுவ ஹெலிக்கொப்டர்களை அங்கு களம் இறக்கித் தொடர்ந்து ரோந்துப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அயோனியன் தீவில் இருந்து கனடா இராணுவத்துக்குச் சொந்தமான சிகோர்ஸ்கி சி.எச். 124 ரக ஹெலிக்கொப்டர் வழக்கமான ரோந்துப் பணிக்காகப் புறப்பட்டுச் சென்றது.

ஹெலிக்கொப்டரில் நேட்டோ படை வீரர்கள் 6 பேர் இருந்தனர். புறப்பட்டு சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகு ராணுவ ஹெலிக்கொப்டர் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதையடுத்து, மாயமான ஹெலிக்கொப்டரைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. நேட்டோ படைக்குச் சொந்தமான விமானங்கள் மற்றும் கப்பல்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டன.



இது குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட டுவிட்டர் பதிவில் கிரீஸ் நாட்டு கடற்கரையில் நேட்டோ படைக்காக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கனடா இராணுவ ஹெலிக்கொப்டர் மாயமாகி உள்ளது. இது குறித்து நான் இராணுவ மந்திரி ஹர்ஜித் சஜ்ஜனுடன் பேசினேன். தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன என குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே மாயமான கனடா இராணுவ ஹெலிக்கொப்டர், அயோனியன் தீவில் இருந்து 60 கடல் மைல் தொலைவில் கடலில் விழுந்து நொறுங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேட்டோ படைக்கு சொந்தமான படகுகள் உடனடியாக அங்கு விரைந்து தீவிர மீட்பு பணியில் இறங்கின. ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த ஒருவரின் உடல் மீட்கப்பட்டது.

மற்ற 5 பேரும் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீட்பு குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிக்கொப்டர் விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# கொரோனாவில் சிக்காமல் தப்பியிருக்கும் 33 நாடுகள்

ஜெனீவா,மே 01

உலகளவில் 33 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், 33 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இதுவரை ஒருவருக்கு கூட கொரோனா பாதிப்பு கூட பதிவாகவில்லை.

ஏப்.20, 2020 நிலைவரப்படி, ஐ.நா அங்கீகரித்துள்ள 247 நாடுகளில் 214 நாடுகளில் கொரோனா பாதிப்பு பதிவாகி உள்ளது. அதில் 190 பேர் உள்ளூரில் கொரோனா பரவலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 214 நாடுகளில் குறைந்தபட்சம் 166 நாடுகள் கொரோனா வால் உயிரிழப்பை சந்தித்துள்ளன. வடகொரியா வில் இதுவரை கொரோனா பாதிப்பு குறித்த தகவல் இல்லை. கொரோனா தொடர்பான தகவல்களை வடகொரியாரகசியமாக வைத்திருக்கலாமென கருதப்படுகிறது. இதுவரை கொரோனா பாதிப்பு இல்லாத நாடுகள், பிரதேசங்கள் வருமாரு:-

1. ஐரோப்பா: ஆலண்ட் தீவுகள், ஸ்வால்பார்ட் மற்றும் ஜான் மாயன் தீவுகள்.

2. லத்தீன் அமெரிக்கா: போவெட் தீவு, தெற்கு ஜார்ஜியா மற்றும் தெற்கு சாண்ட்விச் தீவுகள்

3. ஆசியா: வடகொரியா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான்

4. ஆப்பிரிக்கா: பிரிட்டிஷ் இந்தியப் பெருங்கடல் பகுதி, கொமொரோஸ், பிரெஞ்சு தெற்கு பிரதேசங்கள் , லெசோதோ, செயிண்ட் ஹெலினா

5. ஓசியானியா (பசுபிக் கடல் ): அமெரிக்கன் சமோவா, கிறிஸ்துமஸ் தீவு, கோகோஸ் (கீலிங்) தீவுகள் ,குக் தீவுகள் ஹார்ட் தீவு மற்றும் மெக்டொனால்ட் தீவுகள், கிரிபாடி, மார்ல் தீவுகள், மைக்ரோனேஷியா (கூட்டாட்சி நாடுகள்) நௌரு, நியு, நோர்போக் தீவு, பலாவ், பிட்காயிர்ன், சமோவா, சாலமன் தீவுகள், டோக்கலாவ், டோங்கா, துவாலு, யுனைடெட் ஸ்டேட்ஸ் மைனர் அவுட்லைடிங் தீவுகள் வானுட்டு, வாலிஸ் மற்றும் புட்டுனா தீவுகள்.

இது தவிர, கொரோனா பாதிப்பு பதிவான நிலையில், எந்தவொரு உயிரிழப்பும் இல்லாமல் அங்குவிலா, கிரீன்லேண்ட், செயிண்ட் பர்தலோமி, செயிண்ட் லூசியா, ஏமன் உள்ளிட்ட 5 நாடுகளில் அனைவரும் குணமடைந்துள்ளனர்.

கொரோனா தொற்று அருகில் உள்ள அண்டை நாடுகளுக்கு பரவி வரும் நிலையில், தொலை தூரத்தில் அமைந்திருப்பதால் தீவுகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. சில நாடுகள் உடனடியாக தங்கள் நாட்டு எல்லையை மூடியதுடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததால் கொரோனா பாதிப்பில் இருந்து தப்பியுள்ளன.

# ரஷ்யாவில் பிரதமருக்கே கொரோனாத் தொற்று!

## அதிர்ச்சியில் உறைந்த மக்கள்





ரஷ்யப் பிரதமர் மிக்கைல் மிஷூஸ்டினுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்நாட்டு மக்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ரஷியாவில் ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 498 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. குறிப்பாக நேற்று ஒரே நாளில் புதிதாக 7 ஆயிரத்து 99 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு இது வரை ஆயிரத்து 73 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், ரஷ்யாவின் பிரதமர் மிக்கைல் மிஷூஸ்டினுக்கும் கொரோனா பரவியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 54 வயது நிரம்பிய மிக்கைல் கடந்த ஜனவரி 16 ஆம் திகதிதான் ரஷ்யாவின் பிரதமராகப் பதவியேற்றார்.

வைரஸ்பாதிப்பு உறுதியானதையடுத்து மிக்கைல் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டார்.

வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தி கொண்டாலும் அரசின் கொள்கைகளில் முக்கிய முடிவுகள் எடுக்கும் சமயங்களில் வீடியோ கொன்பிரஸ் மூலம் பங்கேற்பார் என அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், கொரோனா பரவிய பிரதமர் மிக்கைல் மிஷூஸ்டின் வைரஸில் இருந்து விரைவில் குணமடைந்து பணிக்கு திரும்புவார் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், பிரதமர் மிக்கைல் குணமடையும் வரை அவரது பணிகளை துணை பிரதமர் அண்ரீ பிலோசோவ் மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவின் வுகான் ஆய்வுக்கூடத்திலேயேதான் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டுள்ளது!

## அடித்துக் கூறுகின்றார் அமெரிக்க அதிபர் டிரம்ப்



வொஷிங்டன்,மே 01

சீனாவின் வுகான் நகரில் உள்ள ஆய்வுக்கூடத்தில் தான் கொரோனா உருவாக்கப்பட்டுள்ளது என்பதற்கான போதிய ஆதாரம் உள்ளதாக டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா அமெரிக்காவை புரட்டி எடுத்து வருகிறது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலி எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

தற்போதைய நிலைவரப்படி, அந்நாட்டில் 10 லட்சத்து 94 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு 63 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் உள்ள ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் உள்ள ஒரு சந்தை பகுதியில் இருந்துகடந்தஆண்டுடிசம்பர்மாதம்கொரோனா கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்காவை குறிவைத்தே கொரோனா வைரஸ் வுகான் நகரில் உள்ள ஆய்வுக்கூடத்தில் உருவாக்கப்பட்டதாக பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கொரோனா வைரஸ் தொடர்பாக இன்று செய்தியாளர்களை சந்திதார்.

அப்போது, வுகான் நகரில் உள்ள வைராலஜி நிறுவனத்தில் இருந்துதான் கொரோனா பரவி இருக்கிறது என்பதற்கான ஆதாரம் உள்ளதா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அதிபர் டிரம்ப், "ஆம், கொரோனா வுகான் ஆய்வுக்கூடத்தில் உருவாக்கப்பட்டுள்ளதற்கான போதிய ஆதாரம் உள்ளது"என தெரிவித்தார்.

இதையடுத்து, எப்படி இவ்வாறு உறுதியாக கூறுகிறீர்கள் என செய்தியாளர்கள் மீண்டும் பதில் கேள்வி எழுப்பினர். அதற்கு உடனடியாக, "அந்த விவரத்தை உங்களிடம் தற்போது கூற முடியாது" என மறுத்துவிட்டார்.

மேலும், இந்த விவகாரத்தில் சீனா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க உள்ளதாக டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ஒரு லீற்றர் பெற்றோலை 75 ரூபாவுக்கு விற்கலாம்

கொழும்பு, மே. 01

இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலை 75 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ள காரணத்தினால் இலங்கையில் அனைத்துச் செலவுகளையும் ஈடு செய்த பின்னர் ஒரு லீற்றர் பெற்றோல் 75 ரூபாவுக்கும், ஒரு லீற்றர் டீசல் 52 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளுக்கான விலைகளை நிர்ணயம் செய்ய முடியாத நிலைமை உருவாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது நாட்டில் கையிருப்பில் உள்ள எரிபொருளானது ஒரு பெரல் 37 டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டது எனவும், எரிபொருளுக்கான விலை குறைப்பு ஏன் மக்களுக்கு சென்றடையவில்லை என அரசிடம் கோரியபோது அந்த விலை குறைப்பு நிவாரணத்தைபருப்பு, மீனின் போன்ற பொருட்களுக்கு வழங்கி வருவதாகப் பதில் கிடைத்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் டெங்கு பரவும் அபாயம்

கொழும்பு, மே. 01

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வட மேல் மாகாணங்களில் டெங்கு நோய்பரவும் அபாயம் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் விசேடவைத்திய நிபுணர் அருணஜெயசேகர இந்தஎச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தென்மேல் பருவப்பெயர்ச்சி கால நிலை காரணமாக டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், டெங்கு பரவக்கூடிய மாவட்டங்களில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுபாட்டுச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 18 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# தபாலகங்களுக்குப் பேனாக்களுடன் வருமாறு மக்களிடம் வேண்டுகோள்!

கொழும்பு, மே. 01

தபால் அலுவலகங்களுக்குப் பொதுமக்கள் வருகை தரும்போது, உரிய ஆவணங்களில் கையொப்பம் இடுவதற்காக பேனைகளைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, பொதுமக்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் 04ஆம் திகதி உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியிலுள்ள தபால் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், அரசால் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி பொதுமக்கள் முகக் கவசங்களை அணிந்து வருகை தர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் என்பதால், எந்தவொரு தபால் அலுவலங்களினாலும் பேனை வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை தபால் அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பொதுமக்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு, சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு, ஓய்வூதியக் கொடுப்பனவு ஆகிய சேவைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னர் பொதுமக்களிடமிருந்து கையொப்பங்களைப் பெறுவதற்காக ஒரு படிவத்தை மாத்திரம் தபால் அலுவலகங்கள் பயன்படுத்தியிருந்த நிலையில், தற்போது வெவ்வேறு படிவங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பொதுமக்கள் தபால் அலுவலகங்களுக்கு வருகை தரும்போது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேண வேண்டும் என்பதோடு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# பரீட்சைத் திணைக்களத்தால் புதிய இணையத்தள சேவை

கொழும்பு, மே. 01

பரீட்சைகள் திணைக்களத்தினால் புதிய இணையத்தள சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை பெறுபேற்றை அங்கீகரித்து உறுதிப்படுத்தும் ஆவணங்களை வழங்கும் நோக்கில் இந்த இணையத்தள சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகளை இணையத்தளத்தில் பார்வையிடுவதற்கு மேலதிகமாக இந்த சேவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் ஆலோசனைக்கமைய, இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் இந்த உறுதிப்படுத்தும் சேவை முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சேவையினூடாக 2001ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நடத்தப்பட்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பதாரிகள் உள்ளிட்ட உரிய தரப்பினருக்கு அங்கீகரித்து உறுதிசெய்யப்பட்ட ஆவணங்கள் வழங்கப்படவுள்ளன.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக விண்ணப்பதாரர்கள் தமது பெறுபேற்றை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir
நீர்வீழ்ச்சி
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி
நாளை (02/005/2020) தலைப்பு
நீர் வீழ்ச்சி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# தென்மராட்சியில் கசிப்பு விற்ற பெண் உட்பட ஐந்து பேர் கைது

யாழ்ப்பாணம், மே. 01

தென்மராட்சியில் சட்டத்துக்கு புறம்பான கசிப்பு விற்பனை அதிகரித்து வருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் நடவடிக்கையில் 3 இடங்களில் 10 லீற்றர் கசிப்பும் 60 ஆயிரம் லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உள்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெருடாவில், மட்டுவில் மற்றும் சரசாலையில் நேற்று இரவு யாழ்ப்பாணம் போதைத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐந்து பெரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மீட்கப்பட்ட 10 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 60 ஆயிரம் லீற்றர் கோடாவும் பொலிஸ் நிலைத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்களின் தகவல்களைப் பெறத் தொலைபேசி சேவை

கொழும்பு, மே. 01

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 24 மணித்தியால தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

1989 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அவர்கள் தொடர்பான தகவல்களை உறவினர்கள் அறிந்துகொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அபாய வலயங்களில் பணியாற்றும் பொலிஸாருக்கு பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, மே. 01

கொரோனா தொற்று அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாரை பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளியொருவரை எவரேனும் தொடர்புகொள்ளும் பட்சத்தில், அது குறித்து சோதனைகளுக்கான பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளுமாறு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அபாயம் நிலவும் பகுதிகளுக்கு செல்லும் பொலிஸாருக்கு பாதுகாப்பு அங்கி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதித் தடைகளில், கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கையுறை மற்றும் முகக்கவசம் போன்றன கட்டாயமாக்கப்பட்

# நம் தொழிலே நமக்கு தெய்வம்

## அதனை என்றும் போற்றுவோம்!




மே மாதம் முதலாம் திகதி என்றாலே எமக்கு முதலில் ஞாபகம் வருவது தொழிலாளர்களின் மகத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறும் தொழிலாளர் தினமாகும். தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், உண்டு, உடுத்து, சந்தோசமாக வாழ வேண்டும் என்ற நியாயமான சிந்தனையின் தாக்கத்தால் தமக்குரிய உரிமைகளைப் போராடியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட தொழிலாளர்களின் போராட்டத்தால் ஏற்பட்ட மறக்க இயலாத நினைவு நாளாக இத்தினம் காணப்படுகின்றது.

முதலில் அமெரிக்காவில் நிகழ்ந்த போராட்டத்தால் பலர் தங்களது உயிர்களையும் இழந்தனர். இந் நிகழ்வானது தொழிலாளர்களின் தியாகத் திருநாளாக அமைகின்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். உலகில் வாழுகின்ற ஒவ்வொருவரினதும் உயிரைக் காப்பாற்றும் உன்னத சேவையினை வழங்கும் தொழிலாளர்களைப் போற்றுகின்ற தினம்தான் மே தினம் எனலாம்.

நாம் ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலே நமக்கு தெய்வம் என்று கூறலாம். நாம் எந்த தொழில் செய்கின்றோம் என்பது முக்கியமல்ல, நாம் செய்கின்ற தொழிலினை எவ்வாறு செய்கின்றோம் என்பதே மிக முக்கியமாகும். எந்தத் தொழிலினையும் எடுத்துக் கொண்டால் அந்த தொழிலில் எவ்விதமான பாரபட்சமும் பார்க்கக் கூடாது.

> **இன்றைய சமூதாயத்தில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவரும் எந்த தொழிலினையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். நாம் எந்தவொரு தொழிலிலும் உயர்வு, தாழ்வு பார்க்கக் கூடாது. உழைப்பால் உயர்ந்த செல்வந்தர்களின் வாழ்க்கை சரித்திரத்தை நாம் புரட்டி பார்க்கும் போது அவர்கள் எந்த தொழிலினையும் அந்தஸ்து குறைச்சல் என்று கருதவில்லை. அவ்வாறு கருதியிருந்தால் வாழ்க்கையில் முன்னேற்றமடைந்திருக்க மாட்டார்கள்.**


குறிப்பாகச் சொல்லப்போனால் நாம் செய்கின்ற தொழிலில் உயர்வு, தாழ்வு என எந்தவிதமான பேதமும் இல்லை. உலகத்தில் காணப்படுகின்ற அனைத்துத் தொழிலும் போற்றப்பட வேண்டியவையாகும். நாம் செய்கின்ற தொழிலிலே நம் உயிரை மட்டுமல்லாது, பல உயிர்களைக் காக்கும் மகத்தான வேவையைச் செய்கின்றது. ஆகவே நாம் செய்கின்ற தொழிலினை தெய்வமாக மதித்து அர்ப்பணிப்போடு

நமது நாட்டினை எடுத்துக்கொண்டால் தொழிலினை பிரதானமாக நான்கு விதமாக பிரிக்கலாம். அரசதுறை சார் தொழில், தனியார்துறை சார்ந்த தொழில், பெருந் தோட்டத் தொழில், மற்றும் சுயதொழில், விவசாயம், மீன்பிடி, கூலிவேலை என்பவையே ஆகும். இவ்வாறு நாம் அன்றாடம் செய்கின்ற தொழிலே நமது வாழ்க்கையை வாழ்வதற்கு காரணமாய் அமைகின்றது.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு காரணமாய் அமைபவர்கள் தொழிலாளர்களே. எந்த ஒரு நாட்டினையும் எடுத்துக்கொண்டால் அதன் அபிவிருத்திற்கு மூலவேர்களாய் அமைபவர்கள் தொழிலாளர்களே ஆவர்

உதாரணமாக பார்க்கும் போது பெருந்தோட்ட தொழிலில் ஒன்றாகக் காணப்படுவது தேயிலை செய்கையாகும். எமது நாடு உலகளாவிய ரீதியில் தேயிலை உற்பத்தியில் தனக்கான ஒரு இடத்தினை பிடித்திருப்பதற்கு காரணமாய் அமைபவர்கள் பெருந் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களினுடைய கடின உழைப்பினாலே எமது நாடு தேயிலை உற்பத்தியில் சர்வதேச மட்டத்தில் முதன்மையான இடத்தினைப் பெற்றுள்ளது. அந்தளவிற்கு தொழிலாளர்கள் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு காரணமாய் அமைகின்றனர்.

இன்றைய சமூதாயத்தில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவரும் எந்த தொழிலினையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். நாம் எந்தவொரு தொழிலிலும் உயர்வு, தாழ்வு பார்க்கக் கூடாது. உழைப்பால் உயர்ந்த செல்வந்தர்களின் வாழ்க்கை சரித்திரத்தை நாம் புரட்டி பார்க்கும் போது அவர்கள் எந்த தொழிலினையும் அந்தஸ்து குறைச்சல் என்று கருதவில்லை. அவ்வாறு கருதியிருந்தால் வாழ்க்கையில் முன்னேற்றமடைந்திருக்க மாட்டார்கள். ஆகவே இன்றைய உலகில் வாழுகின்ற நாம் எந்த தொழிலினையும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதோடு அந்த தொழிலினை தெய்வமாக கருத வேண்டும்.



தொழிலின் மகத்தவத்தையும், தொழிலாளர்களின் உழைப்பை மதித்துப் போற்றாத சமூகம் ஒருபோதுமே எழுச்சிபெற முடியாது. அபிவிருத்தி அடைந்த நாடுகளை பார்க்கும் போது எந்த தொழிலினையும் சமமாகக் கருதும் மனப்பான்மை காணப்பட்டதாலேயே தொழிற்துறையில் முன்னேற்றமடைந்து உயர்ந்து திகழ்கின்றனர்.

நம்மில் பலரை எடுத்துக்கொண்டால் மேசையில் அமர்ந்து செய்கின்ற தொழிலையே விரும்புகின்றனர். வயலில் இறங்கி வேலை செய்வதை விரும்புவதில்லை. அரச தொழிலினையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து எந்தத் தொழிலும் இழிவானதல்ல என்று கருதி எந்த தொழில் வந்தாலும் செய்வோம் என்ற மனநிலையில் நாம் காணப்பட வேண்டும்.

இன்றைய நவீன உலகில் சில நாடுகள் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டும் நிலையிலுள்ளன. காரணம் அவர்களின் கடின உழைப்பே ஆகும். அந்நாட்டு மக்களின் அயராத உழைப்பும், தொழில் சமத்துவமும் அந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு மூல காரணம் எனலாம்.

நாம் உழைக்கும் வர்க்கத்தினை உயர்வாக மதிக்க வேண்டும். உழைப்பாளர்களின் கடின உழைப்பே நம் ஒவ்வொருவரையும் வாழ வைக்கின்றது. உழவன் சேற்றிலே கால்களை வைத்ததால்தான் நாம் சோற்றிலே கைவைக்க முடியும். இராப்பகலாய் பாடுபட்டு உழைக்கின்ற ஒவ்வொரு உழவுத் தொழிலாளரையும் நாம் மதிக்க வேண்டும். எத்தொழில் செய்பவராயினும் அவர்களும் மனிதர்களே என்ற எண்ணம் நம் மனதில் இருக்க வேண்டும்.

தொழிலாளராகிய எம்மவர்கள் எம்மை யாரும் மதிக்கவில்லையே என வருத்தப்படவேண்டிய அவசியமில்லை. நாம் செய்கின்ற தொழிலாலே பலர் வாழ்கின்றனர் என்று கருத வேண்டும். நாம் சமூகத்தில் கூலிவேலை செய்கின்றோமே, எம்மை யாரும் மதிக்கவில்லையே என்று கருதும் நிலைக்கு எந்த ஒரு தொழிலாளரையும் ஆளாக்கக்கூடாது. எந்தத் தொழில் செய்வோராய் இருந்தாலும் அவர்களையும் நம்மவர்களில் ஒருவராக கருதும் மனப்பான்மை எமக்கு காணப்பட வேண்டும். அவர்களின் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் வெறுமனே அரச மற்றும் தனியார் தொழில் செய்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தினை நாம் கைவிட வேண்டும். அவற்றுக்கு மேலதிகமாக சிறு சிறு கைத்தொழில்களையும் முன்னெடுக்க வேண்டும். அன்றாடம் கூலிவேலை செய்த தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் செய்கின்ற தொழிலை செய்து பார்க்கும்போதுதான் அதனுடைய சிரமம் எமக்குத் தெரியும். அவர்கள் எவ்வளவோ பிரயாசப்படுகின்றார்கள் என்பது எமக்குப் புரியும்.

எனவே தொழிலாளர்களின் உயிர்காக்கும் சேவையினை மதிப்பது எமது மிக முக்கிய கடமையாகும். தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய அனைத்துவிதமான தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கான முயற்சியினை முன்னெப்பதோடு சிறு சிறு தொழிலாளர்களின் தொழில் முன்னேற்ற வளர்ச்சிக்கு உதவுதவதற்கு நாம் முன்வர வேண்டும். இன்றைய காலத்தில் உலகத்தினை குலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா என்ற கொடிய நோயினால் அனைத்து தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக அன்றாடம் கூலித்தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். ஆகவே தொழிலாளர்களின் பெருமையைக் கூறும் இந்த மே தினத்தில் ஒவ்வொரு தொழிலாளர்களையும் போற்ற வேண்டும். எந்த தொழிலினையும் குறைவாக மதிப்பிடாமல் சமமாக, அதாவது உயிர்காக்கும் ஒவ்வொரு தொழிலையும் தெய்வத்திற்கு சமமாக மதித்து செயற்படுவது எம் ஒவ்வொருவரினதும் மிக முக்கிய கடமையாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**அனைத்து உள்ளங்களுக்கும் தொழிலாளர் தின வாழ்த்துக்கள்.**

### இன்றைய மே தினச் சிந்தனை

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
(சமூகவியல் சிறப்புக்கலை, மூன்றாம் வருடம்,

# ஜுன் 20 ஆம் திகதி தேர்தல் நடத்துவது தவறு உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, மே. 01

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, எதிர்வரும் ஜுன் 20 ஆம் திகதியன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சரித்தா மைத்ரி குணரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதியின் செயலாளர், சட்ட மா அதிபர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளரால் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்பதால் அதனை இரத்துச் செய்ய வேண்டும் என்றும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாத காலத்துக்குள் தேர்தலை நடத்தாமல் விடுக்கப்பட்ட தேர்தல் புதிய திகதி அறிவிப்பு சட்டவிரோதமானது என்றும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், மே.01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

நுணாவில், கைதடி, மட்டுவில் வாகையடி, நாவற்குழி, கோகிலாக் கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கிளிகடை, ஆடியபாதம் வீதி நல்லூர், இராம லிங்கம் ஆடியபாதம் சந்தி, கோவில் வீதி சங்கிலியன் வீதி சந்தி, நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன் மார்க்கட்டு பிரதேசம், நாவலர் வீதி (குரகரணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டி வீதி வரை), பாரதி வீதி, புறாடி வீதி, நொத்தாரிஸ் லேன், நல்லூர் குறுக்கு வீதி, கண்டி வீதியில் கச்சேரியிலிருந்து கண்டி வீதி செம்மணி வரை, இலந்தைக்குளம், புங்கன் குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்குப் பிரதேசம், செல்லர் வீதி, ராணி வீதி, மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, டொக்யாட், முல்லி, பனை அபிவிருத்திச் சபை, சங்கன் கட்ட தனியார் நிறுவனம், சித்த ஆயள் வேத பல்கலைக் கழகம், நாராயனா சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை, யுனைற்றட் மோட்டோர்ஸ் லங்கா பல் தேசியக் கம்பனி, Excello Holding (Pvt) Ltd, Chief Secretary's Secretariat, Metro Housing Construction (Pvt) Ltd, யாழ் மாநகர சபை அலுவலகம், Ministry of Education வடமாகாணம், Carlton Sports Network (CSN), அரியாலை மசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, விலிவி சிறுவர் கிராமம், லிங் ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்றெட் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநி யோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# சிசுவை அகற்றி புதைத்த பெண், இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே. 01

இணுவில் – மருதனார்மடம் பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்து சட்டத்துக்குப் புறம்பாக சிசுவை அகற்றி மண்ணில் புதைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்று மன்றில் முன்வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

அத்துடன், பெண்ணை எதிர்வரும் மே 4ஆம் திகதி வரையும் அவருடன் தொடர்பிலிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 11ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்புப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு இன்று மாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் இணுவில் – மருதனார்மடத்தில் உள்ள விநாயகர் விடுதி நேற்று முன் தினம் இரவு சோதனையிடப்பட்டது.

அதனையடுத்து கொக்குவிலையைச் சேர்ந்த 21 வயதுடைய பெண்ணும் உடுவிலைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடந்த 4 மாதங்களுக்கு மேலாக அந்த விடுதியில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது பெண் கருவுற்று சில மாதங்களாகிய நிலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் நவாலியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரால் சட்டத்துக்குப் புறம்பாக சிசு அகற்றப்பட்டுள்ளது. அந்தச் சிசு விடுதியின் முற்றத்தில் புதைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொலிஸாரால் அடையாளம் காட்டப்பட்ட இடம் நேற்று மல்லாகம் நீதிவான் முன்னிலையில் தோண்டப்பட்டது. எனினும் அந்த இடத்தில் சிசுவின் எச்சங்கள் காணப்படவில்லை.

இந்த நிலையில் இளம் பெண்ணும் இளைஞனும் மல்லாகம் நீதிமன்ற மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

தான் கருவுற்ற நிலையில் மருத்துவரின் ஆலோசனையில் சிசுவை அகற்றியதாகப் பெண் ஏற்றுக்கொண்டமை தொடர்பில் பொலிஸார் மன்றில் கூறினர்.

அதுதொடர்பில் பெண்ணை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவப் பரிசோதனை அறிக்கையைப் பெற்று மன்றில் முன்வைக்குமாறு மன்று கட்டளையிட்டது.

அதுவரை .பெண்ணை எதிர்வரும் மே 4ஆம் திகதிவரையும் அவருடன் தொடர்பிலிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை வரும் 11ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

# பொலன்னறுவையில் கற்பாறைக்கு வெடி வைத்தவர் அதில் சிக்கிப் பலி!

பொலன்னறுவையில் கற்களை உடைப்பதற்காக வைக்கப்பட்ட வெடியில் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலன்னறுவை, கலஹகல பிரதேசத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழும் இடத்தில் கருங்கற்களை உடைப்பதற்காக இவர் கல் வெடி வைத்துக்கொண்டிருந்துள்ளார். இதன்போது, அக்கல் வெடி வெடித்ததில் அதில் அகப்பட்டு அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த 60 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாகப் பொலன்னறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நேற்றையதினம் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 9 பேர் கடற்படையினர்

நேற்றையதினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் 9 பேர் கடற்படையினர் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதுவரை 665 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்ட 16 கொரோனா தொற்றாளர்களில் 9 பேர் கடற்படையினராக உள்ளனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 9 கடற்படை வீரர்களும் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் எனவும், 6 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்திலுள்ள ஜா – எல சுதுவெல்ல பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால் அழுத்தத்தில் இயங்கும் கைகழுவும் இயந்திரம்

அலுவலக ஊழியர்கள் மற்றும் சேவை பெற வரும் பொதுமக்களும் தங்களது கைகளை சுத்தப்படுத்தும் நோக்கில் கையினால் நீர்க்குழாயை திறந்து கைகளை சுத்தம் செய்யாமல் கால் அழுத்தத்துடன் இயங்கும் கைகழுவும் இயந்திரம் ஒன்று நேற்று (30) கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.நசீரின் வேண்டுகோளுக்கிணங்க பொருத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முனைப்பில் நாடு தழுவிய ரீதியில் மக்கள் சுகாதார முறையில் இருக்க சமூக இடைவெளியைப் பேணல், முகக்கவசம் அணிதல் மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் முறை உள்ளிட்ட பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இக் கைகழுவும் இயந்திரம் கல்முனை பிரதேச செயலக விதாதா வளநிலைய உத்தியோகத்தர்கள் மூலம் உருவாக்கப்பட்டு பரீட்சார்த்தமாக கல்முனை பிரதேச செயலகத்தில் பொருத்தப்பட்டது.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி இன்றேல் வீதியில் இறங்கிப் போராடுவோம்!

## நீர்கொழும்பு மக்கள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே.01

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத செயலுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. குண்டுதாரிகளுக்கு பின்புலமாக இருந்தது யார்? உதவியது யார்? தாக்குதலை தடுக்க தவறியது யார்? அவர்களை நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை இல்லையேல் கத்தோலிக்க மக்கள் வீதியில் இறங்கி போராடுவோம் என்று நீர்கொழும்பு மாவட்ட அருட்தந்தையர்களும், பயங்கரவாதத்தால் காயமடைந்தோரும் தெரிவித்துள்ளனர்.



ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதம் தொடர்பாக அரசுக்கு அறிவித்தல் ஒன்றை விடுப்பதற்காக நேற்று நீர்கொழும்பு – கட்டுவப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தில் கட்டான, போலாவலான மற்றும் கொச்சிக்கடை ஆலய அருட்தந்தையர்கள் இணைந்து ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் குடும்ப உறுப்பினர்களை இழந்த மற்றும் காயமடைந்த சிலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட நீர்கொழும்பு புனித அன்னம்மாள் ஆலய பங்குத்தந்தை சிறில் காமினி பெர்னாந்து, 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் எவருக்கும் சம்பவம் நடந்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை. குண்டுவெடிப்புச் சம்பவத்தின் நோக்கம் என்ன? இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் தற்கொலைதாரிகள் உயிரிழந்து விட்டனர். அவர்களுக்கு பின்புலமாகச்



செயற்பட்டவர்கள் யார்? அவர்களுக்கு உதவிய முக்கிய புள்ளிகள் யார்? அவர்கள் அனைவரையும் கைது செய்து நீதியின் முன்னிறுத்தியிருக்க வேண்டும்.

ஆனாலும் ஒரு வருடம் கடந்தும் இவை எதுவும் நடக்கவில்லை. அதே போன்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் இந்தக் குண்டுத் தாக்குதலை தடுக்க தவறியவர்களைத் தாக்குதலுக்கு உதவியவர்களாகக் கருதி இந்த நாட்டிற்கு வெளிவிடுவதுடன் அவர்களைத் தண்டிக்க வேண்டும். கொரோனா நோய் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை தணிந்ததும் கத் தோலிக்க மக்களுக்கும் உரிய நியாயம் வேண்டுமென்று' – எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு கருத்து தெரிவித்த கட்டுவப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை மஞ்சுள நிரோஷான் பெர்னாந்து,

'பயங்கரவாத தாக்குதலில் கொச்சிக்கடை மற்றும் கட்டுவப்பிட்டிய ஆலயங்களில் 171 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். தாக்குதலில் காயமடைந்தோரில் 10 பேர் எந்தவித பணிகளையும் சுயமாகச் செய்யமுடியால் படுக்கையில் இருக்கின்றனர். இன்னமும் 50 பேர் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருபவர்களாகக் காணப்படுகின்றன. அத்துடன் தாய் தந்தையை இழந்த குடும்பங்கள் 14 உள்ளன.

இவர்களின் பல்வேறு தேவைகளையும் ஆராய்ந்து எமது சபைகள் தீர்த்து வைக்கின்றது. இருப்பினும் எம்மால் தீர்த்து வைக்க முடியாத பல பிரச்சினைகள் உள்ளது. அதனை அரசாங்கமே தீர்த்து வைக்க முடியும்.

நாங்கள் ஒரு வருடத்துக்கும் மேலாகப் பொறுமையாக அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் எந்த ஒரு சக்திக்கும் அடிமையாகாமல் நீதியாக யாருக்கும் பாதகம் ஏற்படாமல் தண்டிக்கப் படவேண்டும்.



நாங்கள் மீண்டும் மீண்டும் ஊடக சந்திப்புகளை நடத்த விரும்பவில்லை. இச்சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாங்கள் வீதிக்கு இறங்கி போராடுவதற்கு கத்தோலிக்கர்களாக தீர்மானித்துள்ளோம்' – என்றும் தெரிவித்தார்.

இறுதியாக பாதிக்கப்பட்டவர்கள் பேசும் போது, 'காலம் தாழ்த்தாமல் தமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டுமென்றும் தங்களுக்கான நீதியை இந்த ஜனாதிபதியால் மட்டுமே பெற்றுத்தர முடியுமெனவும். அவரில் தங்களுக்கு சிறிய அளவில் நம்பிக்கை உள்ளதாகவும்' தெரிவித்தனர்.

## இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கு அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, மே. 01

வெளிநாடுகளுக்குச் செல்லும், இலங்கையர்களுக்கு இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் காலங்களில் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் ரமேஸ் பத்திரன கருத்து தெரிவிக்கையில்,

தற்போது மக்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முடியாது உள்ளது. எனினும் இன்னும் சில காலங்களில் மீண்டும் உலகம் முழுதும் வழமைக்குத் திரும்பும்.

ஏற்கனவே எமது அரசு தீர்மானம் எடுத்தமைக்கு அமைய இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் ஒன்றிணைப்பில் இவ்வாறான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

எனவே விரைவில் இலத்திரனியல் கடவுச்சீட்டை மக்கள் பாவனைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பல துறையினருக்கும் நிவாரணம்

நாட்டின் உள்ள பல துறையினருக்கும் நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் உயர்கல்வி, தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நிதி வசதியை வழங்குவதற் கும், மூடப்பட்ட நெல் ஆலைகளை மீள திறப்பதற்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதம் மாதம் 20ஆம் திகதியிலிருந்து பெரும்போகத்திற்குத் தேவையான உரத்தை கொள்வனவு செய்வதற்காக ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் உறுதி செய்யப்பட்ட மேலதிக 16 வகைக்கான உற்பத்திகளை ஊக்குவித்தல், மக்கள் வங்கியினால் அஸ்வென்ன என்ற (அறுவடை) பெயரில் 30 லட்சம் ரூபா வரையில் விசேட கடன் முறையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் 200 விசேட கொத்து உர விவசாய கிராமங்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

50 பசுமை பூங்கா மற்றும் அறுவடைகளை விற்பனை



செய்யும் 200 விற்பனை நிலையங்களை ஏற்படுத்துதல் என்பவற்றோடு இம்முறை ஐந்து லட்சத்து 23 ஆயிரம் ஹெக்டெயர் விளைச்சலுக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு உரம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி மருத்துவப் பொருள்கள் விநியோகம்

கொழும்பு, மே. 01

ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி மருத்துவப் பொருள்களைவிநியோகிப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாடளாவிய ரீதியில் ட்ரோன் கமராவை இயக்குபவர்கள் தொடர்பான தரவுகளை சேகரிக்க சிவில் விமான சேவைகள் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

ட்ரோன் கமராவை இயக்கக்கூடிய 450 இற்கும் அதிகமானோர் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனச் சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து ட்ரோன் கெமரா இயக்கக்கூடியவர்களை துரிதமாக பதிவு செய்துகொள்ளுமாறு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

## பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை மே 15 வரை இரத்து

கொழும்பு, மே. 01

அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை வரும் மே 15ஆம் திகதிவரை ரத்துச் செய்யப்படுவதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரது விடுமுறையும் கடந்த மார்ச் மாத இறுதியிலிருந்து தொடர்ச்சியாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை எதிர்வரும் மே 15ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் இன்று அறிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2020 இல் வெளியிடப்பெற்றது.